**செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 24.07.2023 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்றதின் நடவடிக்கைகள்**

**மன்றப் பொருள் 01 :**

அரசாணை (நிலை) எண்.98 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.13.07.2023ல் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவர், நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் நகராட்சி நிதியில் இருந்து கீழ்கண்டவாறு மதிப்பூதியம் வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது, எனவே மேற்கண்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நகர்மன்ற உறுப்பினர்கள் | மதிப்பூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|
| 1. | நகர்மன்ற தலைவர் | 15,000 |
| 2. | நகர்மன்ற துணைத் தலைவர் | 10,000 |
| 3. | நகர்மன்ற உறுப்பினர்கள் | 5,000 |

(ந.க.எண் ; 585/2021/அ1)

அலுவலக குறிப்பு :

1. அரசாணை(நிலை) எண்.98 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.13.07.2023 மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. கணக்கு தலைப்பு எண் .2208004 2023 –2024 ஆம் ஆண்டு வரவு செலவில் திருத்திய மதிப்பீடு தொகை ரூ .12.15 இலட்சம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 235 :** அஇஅதிமுக நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் வரி பணத்தில் தான் தருகிறார்கள் என கோஷமிட்டு எதிர்ப்பு தெரிவித்தனர். அரசாணை மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

**மன்றப் பொருள் 02 :**

செங்கோட்டை நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள், திட்டம் சாரா பணிகள் கொள்முதல் இவைகளுக்கு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சட்டப்பூர்வ பிடித்தல்களான வருமான வரி (ம) சரக்கு மற்றும் சேவை வரி இவைகளை உடனுக்குடன் செலுத்தவதுடன் பட்டய கணக்கர் மூலம் இணையதளத்தில் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி 21–22 மற்றும் 22–23 காலத்தில் வருமான வரி, சரக்கு சேவை வரி இணைய பதிவு செய்யப்பட்டமைக்கு கட்டணம் Associate Accountant (P) Ltd. தென்காசி நிறுவனத்திற்கு ரூ.12,800/– வழங்கிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 236 :** மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**மன்றப் பொருள் 03 :**

செங்கோட்டை நகராட்சி 2021–2022ம் ஆண்டுக்கான ஆண்டு கணக்குகள், திட்டப்பணிகள் மற்றும் திட்ட செலவினங்கள் அனைத்தும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை அலுவலர்களால் தணிக்கை மேற்கொண்டு தணிக்கை அறிக்கைகள் 24–02–2023ம் தேதி வெளியிடப்பட்டது. தணிக்கை அறிக்கை 81 தணிக்கைப் பத்திகளில் 24–05–2023ம் தேதி நடைபெற்ற தணிக்கைக் கூட்டமர்வில் 11 தணிக்கைப் பத்திகளுக்கான விளக்கம்

ஏற்றுக் கொள்ளப்பட்டு நீக்கம் செய்யப்பட்டுவிட்டது. தற்பொழுது 2021−2022ம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கையில் 70 பத்திகள் நிலுவையில் இருந்து வருகின்றன. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் எழுப்பப்பட்டுள்ள தணிக்கைப் பத்திகள் விபரம் தமிழ்நாடு உள்ளாட்சி நிதி விதிகள் 2016 விதி எண் 13(1)ன் பிரகாரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**2021−2022ம் ஆண்டுக்கான மொத்தப் பத்திகள் விபரம் ;**

| **வ.எண்** | **பத்திகள் விபரம்** | **வருவாய் மற்றும் மூலதன நிதி பத்தி எண்கள்** | **குடிநீர் வடிகால் நிதி பத்தி எண்கள்** | **பெரு மொத்தம்** |
|---|---|---|---|---|
| 1 | சிறப்பு பத்திகள் | 11, 12, 13, 14, 15, 16(அ,ஆ), 18, 19, 20, 20(ஆ,இ), 21, 22, 24, 25, 30ஆ, 32, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 44, 45, 46, 47, 48, 49, 50, 53 | 10, 11, 12, 13, 14, 15, 16, 19, 20, 21, 22, 26 | 44 |
| 2 | சாதாரண பத்திகள் | 9ஆ, 10, 17, 20(அ), 23, 26, 27, 28, 29, 30(அ), 31, 33, 42, 43, 51, 52, 54, 55, 56, 57, 58, 59, 60, 61, 62, 63, 64 | 9, 17, 18, 23, 24, 25, 27, 28, 29, 30 | 37 |
| **மொத்தம்** | | **59** | **22** | **81** |

(ந.க.எண் : 1665/2012/அ1)

அலுவலகக் குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண் 237 :** மன்றம் பதிவு செய்யப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 04 :</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் தொலைபேசி செய்தியில் செங்கோட்டை நகராட்சியில் மனித கழிவுகளை அகற்ற பணியாளர்களை பயன்படுத்துதல் தடுப்பு மற்றும் மறுவாழ்வு சட்டம் 2013 விதிமுறைகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவிக்கும் வகையில் ஏதேனும் ஒரு தமிழ் நாளிதழில் முதல் அல்லது கடைசி பக்கம் தவிர்த்து ஒரு நாள் மட்டும் சிறிய அளவில் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, தென்காசி அவர்கள் மூலம் விளம்பரம் செய்யவும் அதற்குரிய விளம்பர கட்டணத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து செலவிடவும் மன்றத்ததின் அனுமதி வேண்டடப்படுகிறது.

(ந.க.எண்.563/2018/எச்1)

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 238 :** மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 05 :**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் தொலைபேசி செய்தியில் செங்கோட்டை நகராட்சியில் 100 கிலோவுக்கும் அதிகமாக திடக்கழிவுகளை உருவாக்கும் நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களின் அக்கழிவுகளை மறுசுழற்சி செய்யும் பொருட்டு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துமாறு அறிவிக்கும் வகையில் தினத்தந்தி (அ) தினமலர் தமிழ் நாளிதழில் முதல் அல்லது கடைசி பக்கம் தவிர்த்து ஒரு நாள் மட்டும் சிறிய அளவில் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, தென்காசி அவர்கள் மூலம் விளம்பரம் செய்யவும் அதற்குரிய விளம்பர கட்டணத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து செலவிடவும் மன்றத்ததின் அனுமதி வேண்டடப்படுகிறது.

(ந.க.எண்.237/2017/எச்1)

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 239 :** மன்ற அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 06 :**

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு உள்ள வாகனங்கள் ஆன 2 LCV வாகனங்கள் 2018 ஆம் ஆண்டும் மற்றும் மினிலாரி 2013ஆம் ஆண்டும் கொள்முதல் செய்யப்பட்டது மேற்படி வாகனங்கள் தினசரி நகரின் பொது சுகாதார பணிகளுக்காக இயக்கப்படுவதால் வாகனங்கள் அடிக்கடி பழுதாகிவிடுகிறது. ஆகவே, கீழ்காணும் விபரப்படி பழுது பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகன எண் வாகன விபரம் | பழுது பணிகள் விபரம் | உத்தேச செலவின தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | TN76AM 3422 LCV | பேட்டரி | 12000 |
| 2. | TN76AM 3463 LCV | | |
| 3. | TN76P 8356 மினி லாரி | டிப்பிங் கம்பரஸர் | 13000 |

மேற்காணும் அட்டவணையில் உள்ள பணிகள் மேற்கொள்ள உரிய முறையில் உள்ளூர் விலைப்புள்ளியினை பெற்று பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவு தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 240 :** அலுவலக குறிப்பு ஏற்று மன்ற அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 07 :**

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு உள்ள வாகனங்கள் ஆன 2 LCV வாகனங்கள் 2018 ஆம் ஆண்டும் மற்றும் மினிலாரி 2013ஆம் ஆண்டும் கொள்முதல் செய்யப்பட்டது மேற்படி வாகனங்கள் தினசரி நகரின் பொது சுகாதார பணிகளுக்காக இயக்கப்படுவதால் வாகனங்கள் அடிக்கடி பழுதாகிவிடுகிறது. ஆகவே, கீழ்காணும் விபரப்படி பழுது பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகன எண் வாகன விபரம் | பழுது பணிகள் விபரம் | உத்தேச செலவின தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | TN76AM 3463 LCV | பிளாட்பார்ம் | 28000 |
| 2. | TN76AM 3422 LCV | டயர் | 35000 |
| 3. | TN76AM 3463 LCV | | |
| 4, | TN76P 8356 | கியர் பாக்ஸ் | 25000 |

மேற்காணும் அட்டவணையில் உள்ள பணிகளுக்கு உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவு தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் 241 :** அலுவலக குறிப்பு ஏற்று மன்ற அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 08 :**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூருக்கு 2023–2024ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பங்குத்தொகை ரூ.30,000/– செலுத்திட கடிதம் வரப்பெற்றுள்ளது. தொகையினை வருவாய் மூலதன நிதியில் இருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மேற்படிதொகையினை செலுத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தொகை ரூ.30,000/–வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 242 :** அலுவலக குறிப்பு படி மன்ற அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 09 :**

நகர்மன்ற தலைவர் ஆர்.ராமலெட்சுமி அவர்கள் முன்மொழியும் தீர்மானம்.

---

உள்ளாட்சியில் நல்லாட்சி நடைபெறுகின்றது என்பதற்கான முத்தாய்ப்பாக செங்கோட்டை நகராட்சியில் மட்டுமே 2021–2022 2022–2023 மற்றும் 2023–2024 ஆம் ஆண்டுக்கு கீழ்க்கண்ட திட்டப்பணிகள் பொதுமக்களுக்கு மிகவும் பயன்படும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை சமர்ப்பித்தவுடன் பணிகளை மேற்கொள்ள அனுமதி ஆணை வழங்கினார்கள்.

| | | |
|---|---|---|
| | <u>கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்</u> | |
| 1 | அ) முத்துசாமி பூங்கா சீர்படுத்துதல் | ரூ.159.40 லட்சம் |
| | ஆ) முஸ்தபா பூங்கா சீர்படுத்துதல் | ரூ.8.00 லட்சம் |
| | இ) அண்ணா நகர் பூங்கா சீர்படுத்துதுல் | ரூ.31.00 லட்சம் |
| | ஈ) நகராட்சி சுடுகாட்டில் நவீன எரிவாயு அமைத்தல் | ரூ.145.00 லட்சம் |
| | உ) நகராட்சி வாரசந்தை மேம்பாட்டு பணிகள் | |
| | ஊ) நகராட்சி தினசரிசந்தை மேம்பாட்டு பணிகள் | ரூ.276.24 லட்சம் |
| | 15வது நிதிக்குழு மான்யம் | ரூ.167.57 லட்சம் |
| | அ) பம்புஹவுஸ் ரோடு சாலைப்பணிகள் | |
| | ஆ) திடக்கழிவு மேலாண்மை பணிகள் | ரூ.28.00 லட்சம் |
| | இ) பம்புஹவுஸ் ரோடு இந்திரா காலனி பேவர் பிளாக் பணிகள் | ரூ.40.44 லட்சம் |

| | | |
|---|---|---|
| | | ரூ.10.50 லட்சம் |
| 3 | <u>நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம்</u><br>அ) சிமெண்ட் தளம் புதுப்பித்தல்<br>ஆ) தார்தளம் புதுப்பித்தல் | ரூ.139.00 லட்சம்<br>ரூ.34.00 லட்சம் |
| | <u>**மொத்தம்**</u> | **ரூ.1039.15 லட்சம்** |

இந்நகரில் இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ.1039.15 லட்சம் மதிப்பீட்டில் நகர்பகுதிகளில் கோரிக்கை வைத்தவுடன் மாண்புமிகு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டு பணிகள் நடைபெற்று வருவதுடன் நிறைவுபெறும் நிலையிலும் இருந்து வருகின்றது. இது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத் திறனை வலுப்படுத்துவதற்கு திராவிடமாடல் அரசு மேற்கொண்ட மாபெரும் சாதனையின் வெளிப்பாடே ஆகும். இந்நகரமக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்கி தீர்மானம் நிறைவேற்ற வேண்டுகின்றேன்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாகத்தான் இன்றையதினம் ஜுலை 2023 முதல் நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகளான நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர், மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மதிப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு தலைவருக்கு ரூ.15000 எனவும் நகர்மன்ற துணைத்தலைவருக்கு ரூ.10000 எனவும் மன்ற உறுப்பினர்களுக்கு ரூ.5000 எனவும் மதிப்பூதியம் வழங்கப்படவேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்களால் வரலாற்று சிறப்புமிக்க இவ்வாணை வெளியிடப்பட்டுள்ளது ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது. எனவே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகளை கௌரவப்படுத்தும் வகையில் மதிப்பூதியம் அளித்து ஆணையிட்ட திராவிட மாடல் அரசின் தலைவர் பார்போற்றும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு மு.க ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த கோடானு கோடி நன்றிகளை உரித்தாக்கி தீர்மானம் நிறைவேற்றல்.

**தீர்மானம் எண் 243** : நகர்மன்ற தலைவர் முன்மொழியும் தீர்மானத்தினை 8வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எஸ். முகமது ரஹிம் அவர்கள் 10வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் பேபி ரஜப் பாத்திமா அவர்கள் வழி மொழிந்தனர். தீர்மானம் ஒரு மனதாக ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நகர்மன்ற தலைவர்
செங்கோட்டை நகரமன்றம்

பெறுநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை
மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி